அகத்தியர் துணை
அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

# ஞானத்திருவடி

ஓங்காரக்குடில் ஆசான் அருளிய சன்மார்க்க உண்மைப் பத்திரிகை
சார்வரி ❂ சித்திரை (ஏப்ரல் – 2020) விலை: ரூ.10/–

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

## உள்ளடக்கம்

1. சித்தர்கள் போற்றித் தொகுப்பின் சிறப்பு ........ 5
2. சித்தர்கள் போற்றித் தொகுப்பு ........ 6
3. மகான் காகபுஜண்ட மகரிஷி அருளிய ஆசி நூல் ........ 11
4. 15.02.1988 அன்று அருளிய **குருநாதரின் அருளுரை குருவருளே திருவருளாகும்** ........ 15
5. மகான் திருநீலகண்ட நாயனார் அருளிய அருள் பிரசன்ன ஆசி நூல் ........ 27
6. பங்குனி மாத பௌர்ணமி விழா ........ 34
7. சித்ரா பௌர்ணமி விழா ........ 34
8. ஓங்காரக்குடில் வெளியீடுகள் ........ 35
9. ஓங்காரக்குடில் நித்திய செயல்பாடுகள் ........ 45

சிறிதும் கருணையில்லாது உயிர்க்கொலை செய்து உண்ணுகின்ற மக்கள் நட்பு நமக்கு தேவையில்லை!

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை,
ஓங்காரக்குடில், துறையூர்.

அருளவே இனியும் காலம் கடத்தா
அகிலம் வாழ் கலியுக மக்களே
அருளும் துறையூர் ஞானபூமி
அரங்கன் வாழ் ஏழாம்படை வீட்டை
படைவீட்டை அணுகி வந்து
பாதுகாப்பை தேடிக் கொண்டு
தடையற ஞானிகள் பூசையோடு
தரும சேவையில் தொடர்பு கூட்டி
கூட்டியே அரங்கமகான் உபதேசம்
கொள்கை தாங்கி வரும் ஞானமான
வாட்டம் போக்கும் ஞானத்திருவடி நூலை
வணங்கி பெற்று வாசித்து வர

– மகான் காகபுஜண்ட மகரிஷி ஆசிநூல்

அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்,

**ஞானத்திருவடி நூலே ஞானிகள் திருவடியாகும்.**

ஞானத்திருவடி என்னும் நூல் முற்றுப்பெற்ற மகான்களைப் பற்றி பேசுவதாகும். இந்நூலை வாங்குதல், படித்தல், மற்றவர்களுக்கு வாங்கிக் கொடுத்தல் ஆகிய அனைத்துமே ஜென்மத்தைக் கடைத்தேற்ற உதவும். எனவே இந்நூல் ஞானவாழ்வு விரும்புகிறவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். இந்நூல் வீட்டில் இருந்தால் நவகோடி சித்தர்களும், சித்தர்களுக்கெல்லாம் தலைவராகிய அகத்தீசரும், அவருக்கு ஆசானாகிய சுப்பிரமணியரும் நமது வீட்டில் இருந்து அருள் செய்வதாக எண்ணவேண்டும்.

மேலும் ஓங்காரக்குடில் ஆசான் 44 ஆண்டு காலம் ஓங்காரக்குடிலில் கடுந்தவம் இருந்து வருகிறார்கள். உலக மக்களை கடவுளின் பிள்ளைகளாக பார்த்து, அவர்களுக்கு வரும் துன்பங்களிலிருந்தும், துயரங்களிலிருந்தும் விடுவித்து ஞானியர்களின் திருவடிதான் உண்மை ஆன்மீகம் என்று சொல்லி அவ்வழியில் நம்மை அழைத்துச் செல்லும் ஓங்காரக்குடில் ஆசான் முருகப்பெருமானின் கல்கி அவதாரம் **தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள், ஞானிகளின் பாடல்களில், தான் உணர்ந்த பல இரகசியங்களை நம்பால் கருணைகொண்டு எளிய முறையில் அருளிய அருளுரைகள் அடங்கியதுதான் **ஞானத்திருவடி** நூல்.

விரைவில் எதிர்பாருங்கள் அற்புதமான ‘‘**ஞானயுகம்**’’ அமைகின்றதை!

அன்புடன்
இரா.மாதவன்.

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**பாவபரிகாரமும் சாபவிமோசனமும் பெற்றுத்தரவல்ல அற்புத பாராயண நூல்**

**சித்தர்கள் போற்றித் தொகுப்பு**

ஞானிகள் அத்துணைபேரும் முருகப்பெருமானால் வாசி நடத்திக் கொடுக்கப்பட்டு மும்மலக் குற்றத்தை வேருடன் அறுத்து வெற்றி கண்டவர்கள். அவர்களுக்கு இறப்பும் பிறப்பும் இல்லை. நரை, திரை, மூப்பு இல்லை. சித்தர்கள் அனைவரும் மரணமில்லாப் பெருவாழ்வை பெற்றவர்கள். ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்தொழில் செய்யும் வல்லமையை பெற்றவர்கள். இவர்களின் திருவடிகளை பூஜித்தாலே நாம் செய்த பாவங்களெல்லாம் நீங்கிவிடும். பாவங்களுக்கு காரணமான உயிர்க்கொலை செய்தல், புலால் உண்ணுதல், மது அருந்துதல், சூதாடுதல், வரவுக்கு மீறிய செலவு செய்தல் இன்னும்பல தீவினை செயல்களெல்லாம் கீழ்க்கண்ட சித்தர்கள் போற்றித் தொகுப்பை படித்தால் நீங்கிவிடும். பெருமைக்குரிய சித்தர்கள் போற்றித் தொகுப்பை ஒரு தீபம் ஏற்றி வைத்து பயபக்தியுடன் பணிந்து வணங்கி பாராயணம் செய்தால் இல்லறமும் சிறக்கும், வீடுபேறாகிய ஞானமும் கைகூடும்.

கல்வி கற்கும் மாணவர்கள் தினசரி பாராயணம் செய்தால், கல்வியில் சிறந்த தேர்ச்சியை பெறுவதோடு நல்ல வேலை வாய்ப்பும் அமையப் பெறுவார்கள்.

ஜென்மத்தைக் கடைத்தேற்ற விரும்புகின்ற ஆன்மீகவாதிகளுக்கு இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பானது, ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள கிடைத்த ஒரு அற்புதமான பாராயண நூலாகும்.

எதை விரும்பி சித்தர்கள் போற்றித் தொகுப்பை பாராயணம் செய்கிறீர்களோ அதை அப்படியே பெற்றுத் தரவல்ல அற்புதமான பாராயண நூல் சித்தர்கள் போற்றித் தொகுப்பாகும். சித்தர்கள் சாதி, மதம், இனம், மொழி, தேசம் கடந்து மனிதகுலத்திற்கு பொதுவானவர்கள். ஆதலினால் சித்தர்கள் போற்றித் தொகுப்பை எல்லா சமயத்தினரும், எல்லா நாட்டினரும், பேதாபேதமின்றி பாராயணம் செய்யலாம். ஆண், பெண், சிறார், பெரியோர், குடும்பஸ்தன், துறவி, பஞ்சபராரிகள், ஏழை எளியோர் என யாவரும் பாராயணம் செய்யலாம். கணவனை இழந்தவர்களும் தடையின்றி விளக்கேற்றி பாராயணம் செய்யலாம். எந்த கட்டுப்பாடும் இல்லை, எந்த சடங்குகளும் இல்லை.

அற்புதம் வாய்ந்த இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை பல கோடி பேர் பாராயணம் செய்து எண்ணற்ற பலன்களை அடைந்ததோடு அவர்களது பிரச்சனைகள் தீர்ந்திடவும், வேண்டுகோள்கள் நிறைவேறி மனம் மகிழ்ந்ததும், இவ்வுலகம் கண்ட அற்புத உண்மையாகும். இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை இன்னும் பலகோடி மக்கள் பாராயணம் செய்து மேன்மை அடைவார்கள் என்பது ஞானிகள் வாக்காகும்.

இதுவரையிலும் ஞானவாழ்வு அடைவதற்கு துணையாக இருந்ததும், இனி அடையப்போகின்றவர்களுக்கும் சித்தர்கள் போற்றித் தொகுப்பு துணையாகும் என்பது சத்திய வாக்காகும்.

## துவக்கப்பாடல்

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

திருமந்திரம் : திருவடிப்பேறு : 1598

ஞானியர்களின் திருவடி பூஜைதான் உண்மை ஆன்மீகம் என்று
உலகறியச் செய்யும் வள்ளல்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்

**தொகுத்து வழங்கிய**

# சித்தர்கள் போற்றித் தொகுப்பு

| | | | |
|---|---|---|---|
| ஓம் | அகத்தியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அகப்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அசுவினித்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அத்திரி மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அநுமான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அம்பிகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருணகிரிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருள்நந்திசிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அல்லமாபிரபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அழுகண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | 10 |
| ஓம் | இடைக்காடர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமலிங்கசுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | உமாபதி சிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஔவையார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கஞ்சமலைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடைப்பிள்ளைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடுவெளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கண்ணானந்தர் | திருவடிகள் போற்றி | 20 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | கண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணபதிதாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கதம்பமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கபிலர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கமலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கருவூர்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கல்லுளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கலைக்கோட்டு முனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கவுபாலச்சித்தர் | திருவடிகள் போற்றி | 30 |
| ஓம் | கணராமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காகபுஜண்டர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காசிபர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காலாங்கிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குகைநமச்சிவாயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குதம்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குமரகுருபரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருதட்சணாமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருராஜர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குறும்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | 40 |
| ஓம் | கூர்மானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கொங்கணேஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கோரக்கர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌசிகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌதமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கமுனிச் சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கர மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கிலிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சச்சிதானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சட்டநாதர் | திருவடிகள் போற்றி | 50 |
| ஓம் | சண்டிகேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சத்யானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவயோகமாமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவவாக்கியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவானந்தர் | திருவடிகள் போற்றி | |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | சுகப்பிரம்மர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சுந்தரானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சுந்தரமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சூதமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சூரியானந்தர் | திருவடிகள் போற்றி | 60 |
| ஓம் | சூலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சேதுமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சொரூபானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜம்பு மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜமதக்னி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனந்தனர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனாதனர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனக்குமாரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜெகநாதர் | திருவடிகள் போற்றி | 70 |
| ஓம் | ஜெயமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஞானச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | டமாரானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தன்வந்திரி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தாயுமான சுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திரிகோணச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருஞானசம்பந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருநாவுக்கரசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருமாளிகைத் தேவர் | திருவடிகள் போற்றி | 80 |
| ஓம் | திருமூலதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருவள்ளுவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தூர்வாசமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தேரையர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நந்தனார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நந்தீஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நாதாந்தச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நாரதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நொண்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பட்டினத்தார் | திருவடிகள் போற்றி | 90 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | பத்ரகிரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பதஞ்சலியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரத்துவாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பராசரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பாம்பாட்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிங்களமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிடிநாகீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிருகுமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிரும்மமுனிவர் | திருவடிகள் போற்றி | 100 |
| ஓம் | பீர்முகமது | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புண்ணாக்கீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலத்தீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலிப்பாணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பூனைக்கண்ணார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | போகமகாரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மச்சமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மஸ்தான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மயூரேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாணிக்கவாசகர் | திருவடிகள் போற்றி | 110 |
| ஓம் | மார்க்கண்டேயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாலாங்கன் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மிருகண்டரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | முத்தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மெய்கண்டதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மௌனச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யாகோபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யூகிமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ரோமரிஷி | திருவடிகள் போற்றி | 121 |
| ஓம் | வசிஷ்டமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரதரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வராகிமிகி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வால்மீகி | திருவடிகள் போற்றி | |

ஓம் விசுவாமித்திரர் திருவடிகள் போற்றி
ஓம் வியாக்ரமர் திருவடிகள் போற்றி
ஓம் வியாசமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் விளையாட்டுச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் வேதாந்தச்சித்தர் திருவடிகள் போற்றி 131
ஓம் எண்ணிலா கோடி சித்தரிஷி கணங்கள்
திருவடிகள் போற்றி போற்றி.

## நிறைவுப்பாடல்

வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

திருமந்திரம் 3047

மேற்கண்ட 131 சித்தர்கள், மகான்களின் திருவடிகளை தினசரி காலையும் மாலையும் போற்றி பூஜை செய்வதே சிறப்பறிவாகும். சிறப்பறிவு பெற்றவர்களுக்கு குடும்ப ஒற்றுமை, புத்திர பாக்கியம், உடல் ஆரோக்கியம் போன்ற நல்வினைகள் பெருகி, மது அருந்துதல், புலால் உண்ணுதல், சூதாடுதல் போன்ற தீவினைகள் நீங்கிவிடும். மேலும், மாதம் ஒருவருக்கோ அல்லது இருவருக்கோ பசித்த ஏழைகளுக்கு பசியாற்றியும் வந்தால், பாவம் புண்ணியம் பற்றி உணர்ந்து புண்ணியம் பெருகி ஞானியாவார்கள் என்பது சத்தியம்.

## ஓங்காரக்குடில் ஆசான் ஆசி!



ஓங்காரக்குடிலில் நடைபெறும் அன்னதானம் மற்றும் அறப்பணிகளுக்காக, தமிழகமெங்கும் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் சார்பாக ஞானத்திருவடி நூலை பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் அன்பர்களுக்கும், அவர்கள் குடும்பத்தாருக்கும் எல்லாம் வல்ல ஞானிகள் அருள் கிட்டி எல்லா நன்மைகளும் அடைவார்கள். மேலும் உடல் ஆரோக்கியமும், நீடிய ஆயுளும், எல்லா நலமும் வளமும் பெறுவார்கள். மேலும் ஞானமும் சித்திக்கும் என்று ஓங்காரக்குடில் ஆசான் ஆசி வழங்கியுள்ளார்கள்.



அன்பான வாசகர்களே வணக்கம்

**உங்கள் ஆண்டு சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா!**

ஞானத்திருவடி நூலை படித்து, உங்கள் உணர்வுகளை எங்களோடு பகிர்ந்துகொள்ள அன்போடு அழைக்கின்றோம்.

– அன்பன் இரா.மாதவன், 98424 55661.

## சார்வரி வருடம் சித்திரை மாத ஞானத்திருவடி நூலிற்கு

# மகான் காகபுஜண்டமகரிஷி அருளிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed.,
திருச்சி. செல் : 99655 71837

1. தகப்பன் சாமியே சுவாமிநாதா
தரணி முழுதும் காத்தருள
தகப்பன் சுவாமியாக வந்த முருகா
தண்டாயுதன் உன் அருள் பார்வைபட்ட

2. பார்வைபட்ட பூமி யாவுமே
பாதுகாப்பும் பசுமை வளமும்
நேர்மையும் சத்திய தருமமுமிக்க
ஞான பூமியாக மாறுமப்பா

3. அப்பனே பேரிடர் அணுகா
ஆற்றல் மிக்க பூமியாக
சுப்பனுன் அருளாற்றல் பலமும்
சூட்சும சக்தியும் பரவிட

4. பரவிட பாருலகே எந்தவித
பாஷாணம் நச்சுக்கிருமிகள் தாக்குதல்
பரவிடா பாதுகாப்பு பெறும்
பாலதண்டாயுதனார் கலியுகத்தில்

5. கலியுகத்தில் மக்களை நோக்கி
கந்தமகா சக்தி கூட்டி
அழியாமை கொண்ட அரங்கமகா
ஆசானாக அவதாரம் கொண்டியங்க

6. இயங்கிவரும் வேலவன் கொள்கைக்கு
ஏற்றம் தரும் ஞானசக்தியாக
தயவுபட அரங்கஞானி கரமாக
தவமாக வரும் ஞானத்திருவடி நூலுக்கு

7. நூலுக்கு சார்வரி தகர் திங்கள்
நிலமதனில் ஆசிதனை காக்கைமுனி
ஞாலமதில் இனிதே விளம்பிடுவேன்
நன்மை தரும் பிரணவக் குடில் எல்லை

8. எல்லை ஏழாம்படை வீடாக
இணையில்லா சக்தி கூடி இருக்க
வள்ளல் அரங்கன் வடிவாக
வடிவேலன் சூட்சும உருவிலிருக்க

9. இருக்கவே ஏழாம்படை வீடாக
எல்லா ஞானியர் பெருமக்களும்
கருத்தாக அருளி ஆசி தர
கந்தனுக்கு பெருமை சேர்க்கும் வீடாக

10. ஆகவே கலியுகம் தன்னில்
அன்னதான சேவை வளர
மிகைபட மகிழ்ந்து முருகப்பெருமானும்
மக்களை காத்திட வேண்டி

11. வேண்டியே அன்னதான அமுதை
வினை வெல்லும் அருளமுதாக்கி
தொண்டென வரும் மக்களும்
தேசிகன் பிறவித் தொடர்பு வழி

12. தொடர்பு வழி உயர் மக்களும்
தொடர்ந்து வந்து உண்டு மகிழ
இடர்களென்பதே அணுகாதபடி
இணையிலா எதிர்ப்பு சக்தி ஆற்றல்கூடி

13. கூடியே தெய்வ அனுகூலம்பட
குறைகளில்லா வாழ்வு பெறுவர்
நாடியே உலகளாவிய வண்ணம்
ஞானவான்களாகி மக்கள் சிறப்பர்

14. சிறப்பு தரும் காட்சி சூட்சுமமாக
சேவையாக தருமமாக முருகப்பெருமான்
மறுப்பின்றி அரங்க மகானுக்குள்
மகத்துவம்பட இணைந்து அருள

15. அருளவே இனியும் காலம் கடத்தா
அகிலம் வாழ் கலியுக மக்களே
அருளும் துறையூர் ஞானபூமி
அரங்கன் வாழ் ஏழாம்படை வீட்டை

16. படைவீட்டை அணுகி வந்து
பாதுகாப்பை தேடிக் கொண்டு
தடையற ஞானிகள் பூசையோடு
தரும சேவையில் தொடர்பு கூட்டி

17. கூட்டியே அரங்கமகான் உபதேசம்
கொள்கை தாங்கி வரும் ஞானமான
வாட்டம் போக்கும் ஞானத்திருவடி நூலை
வணங்கி பெற்று வாசித்து வர

18. வருவதுடன் தரும கொள்கையை
வழிமொழிந்து உலகமெங்கும் பரப்பி
முருகா எனும் செபதபம் போற்ற
முழுமையான பாதுகாப்புடன் அழியாமை பெற்று உயர்வர்
ஞானத்திருவடி நூலுக்கு ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

சார்வரி ஆண்டு சித்திரை மாதத்திற்கான ஞானத்திருவடி நூலிற்கு மகான் காகபுஜண்டமகரிஷி அருளிய ஆசி நூலின் சாரம் :

அப்பனுக்கு பாடம் சொன்ன தகப்பன் சுவாமியே, சுவாமிமலை வாழும் சுவாமிநாதனே, இவ்வுலகினை முழுமையாக காத்தருள தகப்பன் சுவாமியாக வந்திட்ட முருகப்பெருமானே, தண்டாயுதபாணி இறைவனே, உன்னருள் பார்வை பட்ட இடமெல்லாம் உமது அருள் பார்வை பெற்று அருள் பாதுகாப்பும் பசுமை வளம் பெருகி நேர்மையும் சத்தியமும்மிக்க பூமியாக தருமம்மிக்க தருமபூமியாக ஞானம்மிக்க ஞானபூமியாக மாறிடுமப்பா. அப்பனே முருகா உமதருளால் இயற்கை பேரிடர்கள் ஏதும் அணுகாத ஆற்றல்மிக்க பூமியாக சுப்பன் உனது அருளாற்றல்பட சூட்சும சக்தியும் பரவிட, இந்த பேருலகமே எந்தவிதமான விஷக் கிருமிகளின் தாக்குதல் பரவிடாது பாதுகாப்பை பெற்றிடுமப்பா.

பாலதண்டாயுதனார் இந்த துன்பம்மிக்க கலியுகத்தில் உள்ள மக்களைக் காத்திட கந்தமகா சக்தியை ஒன்றிணைத்து, அழிவிலாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வை பெற்றிட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகராக அவதாரம் கொண்டு இயங்கி வர, அரங்கனார் உருவினில் முருகப்பெருமானே அருளிய ஞானக் கொள்கைக்கு ஏற்றம் தரும் ஞானசக்தியாக தயவு மிக்கதாய் முருகப்பெருமானின் தயவுடன் ஆறுமுக அரங்கமகானின் தவசக்தி வடிவமாக வெளிவருகின்ற ஞானத்திருவடி நூலிற்கு சார்வரி வருடம் சித்திரை மாதம் தனிலே ஆசி நூல்தனை காகபுஜண்டர் யானும் கூறுகிறேன் என்கிறார் மகான் காகபுஜண்டர்.

எல்லா நன்மைகளையும் தந்தருளும் ஓங்காரக்குடில் ஏழாம் படைவீடாக முருகப்பெருமானின் தயவினைப் பெற்று ஈடு இணையில்லாது சக்தி பெருகி இருக்கின்றது. ஆங்கே வள்ளல் ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் வடிவினிலே முருகப்பெருமானே சூட்சும வடிவினில் இருக்கின்றார். ஆதலினாலே உலகினில் இதுவரை உள்ள முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளுக்கு மேலாய் ஏழாம் படைவீடாக துறையூர் ஓங்காரக்குடிலினை உலகின் எல்லா ஞானியர்

பெருமக்களும் ஏற்றுக்கொண்டு கருத்துடனும் உளமார அருளாசிகளை தந்து வருகின்றனர். ஆதலின் துறையூர் ஓங்காரக்குடில் முருகப்பெருமானுக்கு பெருமை சேர்க்கும் வீடாய் திகழ்ந்து வருகின்றது.

இந்த கலியுகத்தினிலே அரங்கன் ஆற்றும் அன்னதான தொண்டுகள் வளர முருகப்பெருமானும் அரங்கரின் அன்னதான சேவை கண்டு மகிழ்ந்து உலக மக்களைக் காத்திட வேண்டி குடிலினில் ஞானிகளை வணங்கி சமைக்கப்படும் குடில் உணவினை வினை வெல்லும் வல்லமைமிக்க அருளமுதாகவும் பிணி தீர்க்கும் மருந்தாகவும் ஆக்கி அருளுகின்றார்.

தொண்டுகள் செய்து ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள வருகின்ற மக்களும் அரங்கரின் பிறவித் தொடர்பால் ஓங்காரக்குடிலை நாடி வருகின்ற உயர் மக்களும் குடில் நாடி வந்து அரங்கர் உருவில் ஆறுமுகனார் வழங்கும் அருளமுதை உண்டு மகிழ, அவர்களது வாழ்வில் இடர்கள் என்பதே அணுகாத வகையில் இணையில்லாத எதிர்ப்பு சக்திகள் பெருகி தெய்வீக சக்திகளின் அனுகூலமும் பெற்று குறையில்லாத வாழ்வினை பெறுவார்கள். அவர்கள் அரங்கரிடத்து ஞானம் பெற்று ஞானவான்களாக ஆகி உலகினில் சிறந்து விளங்குவார்கள்.

உத்தம மகாஞானி அரங்கருள் முருகப்பெருமானும் இணைந்து அருள் செய்வதுடன் தெய்வீக செயலாக தொண்டுகளையும் தருமங்களையும் முருகப்பெருமானே நிகழ்த்தி வருகின்றார்.

ஆதலினால் உலக மக்களே இனியும் காலம் தாழ்த்தாமல் ஞானபூமியாகிய துறையூரில் முருகப்பெருமானால் அமைக்கப்பட்ட ஏழாம் படைவீடு துறையூர் ஓங்காரக்குடிலினை விரைந்து அணுகி உங்களுக்கு உண்டான அருள் பாதுகாப்பினை அரங்கர் திருவடி பணிந்து பெற்றுக் கொள்ளுங்கள். தடையின்றி ஞானிகளின் பூஜைகளை தினம்தினம் மறவாமல் செய்து வருவதுடன் உங்களால் முடிந்த அளவு தருமங்களையும் செய்து வாருங்கள்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் உபதேசங்களையும் கொள்கைகளையும் தாங்கி வரும் ஞானத்திருவடி நூலினை உங்களது துன்பங்களை போக்கி கடவுள் அருளினை பெற்றுத் தரும் ஞானத்திருவடி நூலினை வணங்கி பெற்று தினம் படித்து வருவதுடன் அரங்கமகானின் தருமக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு கடைப்பிடிப்பதுடன் அரங்கரின் கொள்கைகளை உலகமெங்கும் பரப்பி வருவதுடன் உலகமெங்கும் முருகப்பெருமான் வழிபாடுகளை செய்திட துணையாய் இருந்து செயல்பட முழுமையான அருள் பாதுகாப்பை பெறுவதுடன் அழிவிலாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வையும் பெற்று சிறப்படைவீர்கள் எனக் கூறுகிறார் மகான் காகபுஜண்டர்.

–சுபம்–

**முருகன் திருவடி வாழ்க**

திருச்சி மாவட்டம், துறையூர், ஓங்காரக்குடிலாசான்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்
ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தில்
15.02.1988 அன்று அருளிய

# குருவருளே திருவருளாகும்

ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம

அன்புள்ள சன்மார்க்க சங்க உறுப்பினர்களே, ஆன்மீக பெரியோர்களே, தாய்மார்களே வணக்கம்.

தமிழ்நாடு ஓர் ஞானபூமி. தமிழ்நாடு ஓர் புண்ணிய பூமி. இங்கே வந்தால்தான் ஞானம் கிடைக்கும். இந்த மண்ணிற்கு அந்தத் தன்மை உண்டு. ஞானம் என்பது ஆன்மாவைப் பற்றி அறிவதாகும். ஆன்மா என்பது மூச்சுக்காற்றைப் பற்றி அறிவதாகும்.

மூச்சுக்காற்றைப் பற்றி அறிகின்றவன் ஆன்மாவைப் பற்றி அறிவான். ஆன்மாவைப் பற்றி அறிந்தவன் நிச்சயம் கடவுள் தன்மையை அடைவான். மற்றவர்களால் இதை அறிய முடியாது.

இந்த மண்ணில் பிறந்தாலன்றி ஞானம் வராது. மற்றவர்கள் ஆசானை பூஜித்து ஆசி பெற்றார்களே தவிர, மரணமில்லாப் பெருவாழ்வை அவர்கள் பெறவில்லை. அந்த வாய்ப்பு இருக்குமேயானால் இந்த மண்ணில் வந்து பிறந்திருக்க வேண்டும். ஞானிகளின் ஆசியைப் பெறுவதற்கு ஓர் உபாயம் சொல்கிறேன்.

**சந்திப் பதுநந்தி தன்திருத் தாளிணை**
**சிந்திப் பதுநந்தி செய்ய திருமேனி**
**வந்திப் பதுநந்தி நாமம்என் வாய்மையாற்**
**புந்திக்குள் நிற்பது நந்திபொற் போதமே.**

**– திருமந்திரம் – உபதேசம் – கவி எண் 141.**

**சந்திப் பதுநந்தி தன்திருத் தாளிணை** – தினமும் காலை எழும்பொழுதே ஓம் அகத்தீசாய நம என்று பன்னிரண்டு முறை ஆசான் நாமத்தை சொல்லுகிறோம். இப்படி சொல்லும்போதே ஆசானை தினந்தோறும் சந்திக்கிறோம். மனிதனுக்கு பசி வந்தால் சாப்பிடுவான், உறக்கம் வந்தால் உறங்குவான், மனைவியோடு

மகிழ்ந்திருப்பான். ஆனால் ஞானிகள் அப்படியல்ல, நிசப்தமாக ஒரே இடத்தில் பல கோடி ஆண்டுகள் பேரானந்தத்தில் அப்படியே இருப்பார்கள். ஆசான் நாமத்தை சொல்லி அழைக்கும்போது, ஆசான் நம்மை பார்க்கிறார்.

**சந்திப் பதுநந்தி தன்திருத் தாளிணை** – தினமும் ஆசான் நாமத்தை சொல்லி அவருடைய ஆசியைப் பெற்றுக் கொண்டோம். மோனநிலையில் இருக்கின்ற ஆசானை, தினமும் நாமத்தை சொல்லி ஆசானை சந்தித்தோம். ஓம் அகத்தீசாய நம என்று சொன்னால் ஆசான் நம்மை பார்ப்பார்.

**சிந்திப் பதுநந்தி செய்ய திருமேனி** – காலை எழுந்து அமர்ந்து ஓம் அகத்தீசாய நம என்று பன்னிரண்டு முறை சொல்லி வீழ்ந்து வணங்கி ஆசான் திருவடியை மானசீகமாக தொட்டு ஆசி பெறுகிறோம்.

**சந்திப் பதுநந்தி தன்திருத் தாளிணை** – அவருடைய பாதத்தை திரு பாதம் என்கிறார். நாமஜெபம் செய்து ஆசான் திருவடியை மானசீகமாக தொட்டு கண்ணில் வைத்துக் கொள்கிறோம். இப்படி ஆசானை தினமும் சந்திக்கிறோம், சிந்திக்கிறோம்.

**சிந்திப் பதுநந்தி செய்ய திருமேனி** – அவருடைய தேகம் தகதகவென்று மின்னும். அவருடைய நாமத்தை சொல்லி அவர் தேகத்தை சிந்திக்கிறோம்.

**வந்திப் பதுநந்தி நாமம்என் வாய்மையால்** – வந்திப்பது என்பது தினந்தோறும் ஆசானை புகழ்ந்து பேசுவதாகும்.

**புந்திக்குள் நிற்பது நந்திபொற் போதமே** – ஆசான் நந்தீசர், ஆசான் திருமூலதேவர், ஆசான் போகமகாரிஷி, ஆசான் சட்டமுனிவர், ஆசான் இராமலிங்கசுவாமிகள் போன்ற ஞானிகளை தினம்தினம் எவனொருவன் புகழ்ந்து பேசுகிறானோ, நிச்சயம் அவன் கடவுள் தன்மையை அடையப்போகிறான் என்று பொருள்.

காற்று புக முடியாத இடத்திலும் கூட, ஆசானுடைய அறிவு நுழைந்து விடும். ஆசானுடைய அறிவு அப்பேர்ப்பட்ட அதிநுட்ப அறிவாகும்.

**புந்திக்குள் நிற்பது நந்திபொற் போதமே** – ஆசானுடைய பெருமைகளை பேசபேச, சிந்திக்கசிந்திக்க, நாமஜெபம் செய்யசெய்ய, ஆசானின் திருவடியை தொட்டு வணங்கவணங்க அவனுடைய அறிவு முழுவதும் கடவுள் தன்மையை அடையும். ஆசான் என்னென்ன அறிவைப் பெற்றானோ, அத்தனை அறிவும், சிறப்பும் இவன் பெறுவான். இவனே கடவுள் தன்மையை அடைவான். முற்றுப்பெற்ற முனிவனை புகழ்ந்து பேசுவதால் இயல்பாகவே அவரும் இவனும் ஒன்றுபட்டு விடுகிறார்கள்.

தினமும் ஆசானை பூசிக்கபூசிக்க, ஆசானின் நாமத்தை சொல்லசொல்ல, அன்னதானம் செய்யசெய்ய, தினமும் முயற்சிக்கமுயற்சிக்க இப்படியே அனுதினமும் இருப்பானானால், அவனுடைய அறிவு மலரைவிட மென்மையாகும்.

இதற்கு முன்னே இவனுடைய அறிவு கரடுமுரடாக இருந்தது. ஆசானுடைய ஆசி காரணமாக மென்மையான அறிவு வந்தது.

**புந்திக்குள் நிற்பது நந்திபொற் போதமே** – தினமும் ஆசானை பூஜை செய்து தொடர்பு கொள்ளும்போது, சிறப்பறிவு தானே வரும். எதையும் உணர்கின்ற பரிபக்குவம் வரும். ஞானத்தை அடைந்தே தீர வேண்டுமென்கிற ஆர்வம் வரும். முன்வைத்த காலை பின்வைக்காத தீரம் வரும். இது அனைத்தும் ஆசான் கிருபையால் கிடைக்கும்.

சிவம் என்றால் மோனம் என்று பொருள்படும். மோனநிலையில் இருக்கின்ற, அசையாமல் இருக்கின்ற எதுவோ அது சிவமாகும். அதை சிவன் என்றும் சொல்வார்கள்.

சிவபெருமான் என்பவர் யாரென்று கேட்டால், சாட்சாத் பரப்பிரம்ம சொரூபியாகிய ஆசான் சுப்பிரமணியருடைய தந்தை. ஆசான் சுப்பிரமணியர் தனது தந்தைக்கு இந்த தத்துவத்தை போதித்தார். சிவபெருமானை ஆசானாக எண்ணி வணங்கி பூஜை செய்து வந்தால் உங்களுக்கு ஞானம் கிடைக்கும்.

சிவபெருமானை தினமும் பூசித்து வந்தால் யாரேனும் உண்மைப் பொருள் அறிந்த ஆசானை உங்களுக்கு சுட்டிக்காட்டுவார்கள். சிவபெருமானை வணங்குகின்ற மார்க்கத்தை ஆசானின் துணையில்லாமல் அறிய முடியாது. ஆசான் கிருபை இருந்தால்தான் சிவபெருமானை வணங்க முடியும்.

இப்படி வணங்கி வந்தால் செல்வநிலை பெருகும், குடும்பத்தில் அமைதி உண்டாகும், நல்ல கல்வியறிவு ஏற்படும்.

**சிவனை வழிபட்டார் எண்ணிலாத் தேவர்**
**அவனை வழிபட்டங் காமாறொன் றில்லை**
**அவனை வழிபட்டங் காமாறு காட்டுங்**
**குருவை வழிபடிற் கூடலு மாமே.**

**– திருமந்திரம் – இதோபதேசம் – கவி எண் 2119.**

**சிவனை வழிபட்டார் எண்ணிலாத் தேவர்** – பல கோடிக்கணக்கான மக்கள் சிவனை வழிபட்டார்கள். ஆனால் அவர்களெல்லாம் கடவுள் தன்மையை அடைய முடியவில்லை. சிவனை வழிபட்டால் பல நன்மைகள் உண்டாகும். ஆனால் மரணமில்லாப் பெருவாழ்வை பெறுவதற்கும் சிவபெருமானை வணங்குவதற்குரிய மார்க்கத்தை ஆசான் சுட்டிக்காட்ட வேண்டும்.

**அவனை வழிபட்டங் காமாறொன் றில்லை** – சிவபெருமானை வணங்குவதால் திருமணம் நல்லபடி நடைபெறும், பண்புள்ள புத்திரபாக்கியம் அமையும், செல்வநிலை பெருகும். இதைத்தான் உலக மக்கள் விரும்புவார்கள். ஆனால் இதைவிட மேலான நிலையாகிய மரணமில்லாப் பெருவாழ்வை பெறுவதற்குரிய மார்க்கத்தை அறிய வேண்டும். சிவபெருமானை பூஜை செய்வதால் அந்த மேல்நிலையை அடையலாம்.

எனக்கு மூன்று பெண் குழந்தைகள் இருக்கிறது. எனக்கு ஆண் குழந்தை வேண்டுமென்று கேட்பான். கடவுள் உனக்கு ஆண் குழந்தை உண்டு என்பார். இன்னொருவன் எனக்கு இருபது காணி நிலம் இருக்கிறது. பக்கத்தில் நான்கு ஏக்கர் நிலம் இருக்கிறது. அதுவும் எனக்கு கிடைத்தால் நன்றாக இருக்குமென்று கேட்பான். சரி அந்த நிலத்தை உனக்கு தருகிறேன் என்று கடவுள் சொல்வார். நல்ல வீடு வேண்டும் என்று கேட்பான். சரி அதற்கும் உனக்கு ஆசி தருகிறேன் என்று கடவுள் சொல்வார். இன்னும் அவன் என்னென்ன வேண்டுமென்று கேட்டானோ, அதையெல்லாம் கடவுள் கொடுத்தார்.

அழியக் கூடியதை கேட்டுப் பெறுகின்ற இவனை அறிவில்லாதவன் என்று கடவுள் சொன்னார். காலை மாலை தினமும் பூசை செய்கிறான். இவனைப் பார்த்து அறிவில்லாதவன் என்று சொல்கிறாரே? என்ன காரணம்? என்று கேட்டான். இவன் எதைக் கேட்க வேண்டுமோ அதைக் கேட்கவில்லை. எனக்கு அருளும் வேண்டும், பொருளும் வேண்டுமென்று கேட்டிருக்க வேண்டும். ஆனால் இவன் பொருளைப் பற்றியே கேட்டிருக்கிறான்.

இருபது வருடம் என்னை வணங்கினான். பொருள் வேண்டுமென்று கேட்டதாலே, அவனுக்கு அளவில்லாத செல்வத்தை அள்ளிக் கொடுத்தேன். மீண்டும் பேராசையின் காரணமாக இன்னும் பொருள் வேண்டுமென்று கேட்கிறான். கோடிகோடியாக அள்ளிக் கொடுத்தேன். ஆனால் அவனுக்கு போதுமென்ற சிந்தனை கடைசி வரையிலும் வரவில்லை. ஆசானிடம் கேட்க வேண்டியதை கேள் என்று மகான் திருமூலதேவர் சொல்கிறார். எப்பொழுது இந்த அறிவு வருமென்றால், ஆசான்தான் சுட்டிக்காட்ட வேண்டும்.

அடியேனுக்கு செல்வநிலை பெருக வேண்டும், என் மனைவிமக்கள் நோயில்லாது இருக்க வேண்டும், என் பிள்ளைகளுக்கு சிறந்த கல்வி இருக்க வேண்டும், என் பிள்ளைகளுக்கு திருமணம் நல்லபடி நடைபெற வேண்டும், அவரவர்களுக்கு வீடு வேண்டுமென்று கேட்டுவிட்டு, இதெல்லாம் பொய் என்று உணர்கிற அறிவு எனக்கு வேண்டும். பொய்யென்று உணர்ந்தால் அதிலும் கவனம் செலுத்துவான், இதிலும் கவனம் செலுத்துவான்.

அடியேனுக்கு மரணமிலாப் பெருவாழ்வு வேண்டுமென்று ஆசானை கேட்கின்றவன் உண்மையை உணர்ந்திருக்கிறான் என்று ஆசான் சொல்வார். இல்லறமும் சிறக்க வேண்டும், அதேசமயத்தில் துறவறமும் சிறக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறான்.

**வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை; மற்றுஅது**
**வேண்டாமை வேண்ட வரும்.**

**– திருக்குறள் – அவா அறுத்தல் – குறள் எண் 362.**

ஒரு மனிதன் விரும்பினால் இல்லறமும் வேண்டும். உலகத்தில் கௌரவமாக வாழ்வதற்கு பொருள் வேண்டும், மனைவிமக்கள் துணை வேண்டுமென்று ஆசானை கேட்டால் மட்டும் போதாது, மரணமில்லாப் பெருவாழ்வும் வேண்டுமென்று கேட்க வேண்டும். இப்படி கேட்காவிட்டால் அவனுடைய அறிவு கஞ்சத்தனமானது, அத்தகைய அறிவு அவனுக்கு பயன்படாது. இப்படி கேட்பதற்கு ஆசான் சுட்டிக்காட்ட வேண்டும்.

இப்பொழுது நமக்கு இருக்கின்ற அறிவு ஒன்றைப் பற்றி உணர்கின்ற ஜடமான அறிவு. நாம் செய்த பாவத்தின் காரணமாக திடமான அறிவு நமக்கு இருக்காது. அதை திண்மையான அறிவு என்று சொல்ல முடியாது. ஆசானை தினமும் பூஜை செய்தால், திடமான, திண்மையான, உறுதியான அறிவு ஆசான் கிருபையால் வரும்.

அந்த திடமான அறிவைப் பெறுவதற்கு ஆசான் திருமூலதேவர் சொல்கிறார்,

**ஆமேவு பால்நீர் பிரிக்கின்ற அன்னம்போல்**
**தாமே தனிமன்றில் தன்னந் தனிநித்தந்**
**தீமேவு பலகர ணங்களுள் உற்றன**
**தாமேழ் பிறப்பெரி சார்ந்தவித் தாமே.**

**– திருமந்திரம் – உபதேசம் – கவி எண் 120.**

அன்னப்பறவையிடம் பாலையும் தண்ணீரையும் கலந்து வைத்தால், பாலை மட்டும் பிரித்து உண்ணும். பாலும் தண்ணீரும் கலந்து இருந்தாலும் அந்த பாலை மட்டும் உண்ணக்கூடிய ஆற்றலை, அந்த அன்னப்பறவைக்கு இயற்கை கொடுத்திருக்கிறது.

**ஆமேவு பால்நீர் பிரிக்கின்ற அன்னம்போல்** – கிண்ணத்தில் பாலும் தண்ணீரும் கலந்திருந்தாலும், அதில் பாலை மட்டும் உண்ணக்கூடிய ஆற்றல் அன்னப்பறவைக்கு இருப்பதுபோல, ஆசானுடைய ஆசியைப் பெற்ற காரணத்தினாலே, நாம் செய்த வினைகளையெல்லாம் நீக்கிவிட்டு, நன்மையை மட்டும் செய்ய வைத்து, நமக்கு நன்மையை தரக்கூடிய ஆற்றல் ஆசானுக்கு உண்டு.

ஆசான் நம்முடைய புருவமத்தியில் ஒடுங்கியிருந்து உடம்பில் இருக்கின்ற அசுத்தத்தையெல்லாம் நீக்கி நமக்கு சிறப்பறிவை தந்து, உறுதியான அறிவை தந்து, ஞானத்தை அடைய வேண்டுமென்ற ஆர்வத்தை தருவார்கள்.

தக்க ஆசான் கிடைத்தால் இலகுவாக ஞானியாகலாம். தக்க ஆசான் கிடைக்காத குற்றமே அவனுக்கு ஞானம் என்பது கடினமாக இருக்கிறது. ஒருவன் ஞானியாவது கடினமான ஒன்றா? என்று கேட்டால் உண்மைப்பொருள் அறிந்த ஆசான் கிடைத்தால் ஞானியாவது கடினமில்லை.

வாய்த்திட்டால் மௌன குரு வாய்க்க வேண்டும். மௌன குரு ஆசானாக கிடைக்க வாய்ப்பு கிடைத்தால், நாம் எடுத்துக் கொண்ட காரியம் நிச்சயமாக கடினமாக இருக்காது, இலகுவாக வெற்றி பெறலாம்.

உண்மைப் பொருளறிந்த ஆசான் கிடைத்தால் ஞானம் என்பது இலகுவாக இருக்கும். ஒரு பாதையை வகுத்துக் காட்டினால் இலகுவாக போகலாம். உண்மைப் பொருள் அறிந்த ஆசான் கிடைக்காத காரணம் இவன் செய்த பாவமே. நல்வினை மிகுந்திருந்தால் உண்மைப் பொருள் அறிந்த ஆசான் கிடைப்பார்.

தெளிவான ஆசான், பொருளுணர்ந்த ஆசான் சுட்டிக்காட்டினால் மிகப்பெரிய கடினமான ஞானம் என்பது மிகவும் இலகுவாக கிடைக்கும்.

ஆசான் அகத்தீசரையே குருவாக ஏற்றுக் கொண்டு, தினமும் பூஜை செய்தால் எது கடினமோ அது இலகுவாகும். உண்மைப் பொருளறிந்த ஆசான் கிடைக்காத காரணமே கடினம். கடினம் என்பது வினைப்பயன்.

நிச்சயமாக புண்ணியவான்கள்தான் ஆசான் அகத்தீசரை குருவாக உணர முடியும்.

சிறுதெய்வ வழிபாடு செய்பவர்கள் உயிர்ப்பலி இடுவார்கள். இப்படி செய்வதால் நல்வினையை இழந்து பாவத்திற்கு ஆளாவார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு ஞானம் என்பது கடினமான ஒன்றாகும்.

உயிர்வதை செய்கின்றவர்களுக்கு ஞானம் என்பது கிட்டாது, அவர்கள் நரகத்திற்கு போகாது இருத்தலே நன்மை தரும். இவர்களுக்கு ஞானம் என்பதே எட்டாததாகும்.

பல ஜென்மங்களில் செய்த பாவங்கள்தான் ஒருவனை முன்னேற விடாமலும், ஞானத்தை அடைய விடாமலும் தடுக்கும். அதுமட்டுமல்ல பொருளறிந்து உரைக்கக் கூடிய ஆசான் இல்லாமல் இருப்பதும் அவர்களுக்கு ஞானம் என்பது கடினமான ஒன்றாக இருக்கும்.

முன் செய்த வினை நீங்கினால், உண்மைப் பொருள் உணர்ந்த ஆசான் கிடைப்பான். ஆசான் கிடைத்த அப்பொழுதே எதுவெல்லாம் கடினமாக தெரிகிறதோ அதுவெல்லாம் இலகுவாகும்.

மாதப்பொழுது ஆன பெண்கள் ஞானிகளை பூஜிக்கலாமா? என்ற சந்தேகம் உங்களுக்கு இருக்கிறது. எப்படி பூஜை செய்வது? நமது பூஜையை கடவுள் ஏற்றுக் கொள்வாரா? என்ற ஒரு ஐயப்பாடு பெண்களாகிய உங்களுக்கு இருக்கிறது. அந்த மூன்று நாட்களில் பூஜை செய்யாமல் காலத்தை வீணாக்கக் கூடாது.

வாழ்நாட்களை வீணாக்காது தினமும் பூஜை செய்ய வேண்டும். தீட்டு என்பது ஒரு வகையான கற்பனை. இது மூடர்கள் வகுத்ததாகும். மாதப்பொழுது ஆகாவிட்டால் பெண்களுக்கு சுத்த இரத்தம் உருவாகாது.

மாதப்பொழுது ஆன பெண்களுக்கு நாடிநரம்புகளில் தளர்ச்சி ஏற்படும், உடல் சோர்வடையும். அந்த மூன்று நாட்கள் அவர்கள் ஓய்வாக இருக்க வேண்டும். அந்த காலத்தில் தீட்டு என்ற பெயரில் பெண்களுக்கு ஓய்வு கொடுத்தார்கள். அதற்காகத்தான் தீட்டு என்று வைத்திருக்கிறானே தவிர, பூஜை செய்வதற்கு அது ஒரு பெரிய தடையாக இருக்க முடியாது.

அந்த மூன்று நாட்களும் நன்றாக ஓய்வு எடுத்துக் கொண்டு ஆசானை பூஜித்து வரலாம். அதனால் ஒன்றும் குற்றமில்லை. இப்படி யாரேனும் எடுத்து சொன்னால்தான் பெண்களுக்கு புரியும்.

பூஜை செய்யும் பெண்களுக்கு தீட்டு என்பது தடையாக இருக்க முடியாது. அந்த மூன்று நாட்களும் தலைக்கு குளித்துவிட்டு ஆசானை பூஜை செய்து நாட்களை பயனுள்ளதாக ஆக்கிக் கொள்வதே சிறப்பறிவாகும்.

தீட்டை காரணம் காட்டி பூஜை செய்யாமல் இருப்பது முட்டாள்தனம். தீட்டு என்பது ஏமாற்று வேலை. ஏனென்றால் இந்த உடம்பே தீட்டுதான்.

**ஐயிரண்டு திங்களா யடங்கிநின்ற தூமைதான்**
**கையிரண்டு காலிரண்டு கண்ணிரண்டு மாகியே**
**மெய்திரண்டு சத்தமாய் விளங்கிரச கந்தமும்**
**துய்யகாய மானதும் சொல்லுகின்ற தூமையே.**

**– மகான் சிவவாக்கியர் – கவி எண் 207.**

பத்து மாதம் தீட்டு வெளியாகாமல் இருந்த காரணத்தினால்தான், தாயின் வயிற்றில் குழந்தை உருவாகி பத்து மாதம் கழித்து பிறக்கிறது. பத்து மாதம் அடங்கிய தீட்டு வெளியாகாது இருந்து உருவான உடம்பே தீட்டுதான். தீட்டு என்று தனியாக இருக்க முடியாது. இதைக் கேட்கும் பெண்கள் தீட்டு என்று அந்த மூன்று நாட்களை வீணாக்காமல், தலைக்கு குளித்துவிட்டு ஆசானை பூஜை செய்து பயனுள்ளதாக்கிக் கொள்ள வேண்டும்.

ஆன்மா என்றால் உயிர் என்று பொருள்படும். இந்த உயிருக்கு ஆக்கம் தேவை. உயிருக்கு ஆதாயம் தேடிக் கொள்ள வேண்டும். உடம்பு திடமாக இருக்க வேண்டுமென்பதற்காக காலை, மாலை, இரவு என மூன்று வேளை சாப்பிடுகிறோம். அதுவும் சத்துள்ள உணவாக இருக்க வேண்டும்.

உணவை நாம் தினசரி கொடுப்பதால், உடம்பு ஆக்கத்தை உண்டாக்குகிறது. நாம் நன்றாக சாப்பிட்டால்தான் நடமாட முடியும், தெம்பாக இருக்க முடியும். ஆகவே உடம்பு உற்சாகமாக இருக்க வேண்டுமென்பதற்காக உணவை தருகிறோம். உடம்பு வளர்வதற்கு, நடமாடுவதற்கு, தெம்பாக இருப்பதற்கு உணவே காரணம்.

உயிருக்கு ஆதாயம் வேண்டுமல்லவா? உயிருக்கு ஆதாயம் தேடுவதற்கு சாந்தமான வழித்துறை வேண்டும். உண்மைப் பொருளை அடைவதற்குரிய மார்க்கத்தை பின்பற்றுவதுதான் உயிருக்கு ஆதாயம். தியானம் செய்வதும், தானம் செய்வதும் உயிருக்கு ஆதாயத்தை உண்டாக்கும். உயிருக்கு ஆதாயம் தேடுகின்ற மக்கள்தான் அடுத்த பிறவியில் நன்றாக இருப்பார்கள்.

**சிறப்புஈனும்; செல்வமும் ஈனும்; அறத்தின்ஊஉங்கு**
**ஆக்கம் எவனோ உயிர்க்கு?**

**– திருக்குறள் – அறன் வலியுறுத்தல் – குறள் எண் 31.**

நல்ல நெறிமுறைகளை கடைப்பிடிப்பதுதான் உயிருக்கு ஆக்கத்தைத் தரும். பிற உயிர்களுக்கு நன்மை செய்து வந்தால் உயிருக்கு ஆதாயம் உண்டு. பிற உயிர்களுக்கு மகிழ்ச்சிக்குரிய செயலை ஒருவன் செய்து வருவானேயானால், நிச்சயமாக அவனுடைய ஆன்மாவிற்கு ஆதாயத்தை தேடுகிறான் என்று பொருள்படும். பிற உயிர்களுக்கு துன்பம் செய்த அனைவரும், தனது ஆன்மாவிற்கு துன்பம் செய்து கொள்கிறார்கள் என்று பொருள். உயிருக்கு ஆதாயம் வேண்டுமெனில், பிற உயிர்களுக்கு கருணை காட்ட வேண்டும். பிற உயிர்களுக்கு நன்மை செய்யசெய்ய, நம்முடைய ஆன்மாவிற்கு ஆக்கம் வரும். ஆன்மாவிற்கு ஆக்கத்தை தேடிக்கொள்வதே ஆன்ம இலாபம் ஆகும்.

நல்ல நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பதே உயிருக்கு ஆக்கத்தை தரும். பொறிபுலன்களை அடக்கி நன்னெறியோடு தியானம் செய்தால் அது உயிருக்கு ஆக்கத்தை தரும். ஆன்மாவிற்கு ஆதாயம் என்பதே தினமும் ஆசானை வழிபாடு செய்வதாகும்.

எவனொருவன் பல ஜென்மங்களாக தியானம் செய்து, தானம் செய்து தனது ஆன்ம பலத்தை பெருக்கிக் கொண்டானோ, அவனுடைய ஆன்மாவை ஆசான் ஒளி பெறச் செய்வார்.

ஞானிகள் அனைவரும் ஆன்மாவை திடப்படுத்திக் கொண்டார்கள், பிரகாசமாக்கிக் கொண்டார்கள், அளவிலாத சித்தியை பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆசானுடைய திருவடியைப் பற்றாமல் நமக்கு ஆன்மலாபம் கிடைக்காது. இதுதான் ஆன்மலாபத்தை அடைவதற்குரிய மார்க்கமாகும்.

இல்லறத்தார்கள் கடவுள் தன்மையை நிச்சயமாக அடையலாம். இல்லறத்தான் தன்னை நோக்கி வருகின்ற விருந்தினரை அன்போடு உபசரிக்கிறான், ஏழைகளுக்கு பசியாற்றுவிக்கிறான், மனைவி மக்களிடம் அன்பு காட்டி அவர்களுக்கு செய்ய வேண்டிய கடமையை செய்கிறான். தன்னை இந்தளவிற்கு ஆளாக்கிய தாய்தந்தையருக்கு தேவையான உதவிகளை செய்து அவர்களுக்கு பாதுகாவலாக இருந்து அவர்களின் முழு ஆசியைப் பெறுகிறான். எனது மகன் நல்லவன் என்று சொல்லுகின்ற சரியான இடத்திற்கு வருவதற்கும் இல்லறம்தான் துணையாக இருக்க முடியும். இல்லறத்தானால் மட்டும்தான் இதை செய்ய முடியும். தாய்தந்தையை கவனிப்பதற்கு இல்லறத்தானால் மட்டும்தான் முடியும்.

தனது தாய்தந்தையருக்கும், மனைவிமக்களுக்கும் பாதுகாப்பாக இருந்து அவர்களிடம் அன்பு காட்டி, தன்னை நோக்கி வருகின்ற விருந்தினரை உபசரித்து, தினமும் ஞானிகளை பூஜை செய்து வருகின்ற இல்லறத்தான் நிச்சயமாக கடவுள் தன்மையை அடைவான். இதற்கு இல்லறம்தான் சிறந்ததாகும். இல்லறத்தான் தான் ஞானியாக முடியும்.

